

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

விழிப்புலனற்ற நபர்களின் நம்பிக்கை நிதியம்

செலவினத் தலைப்பு எண் - 216-2-3-3-3-1508

சமூக சேவைகள் திணைக்களம்
இரண்டாம் மாடி
செத்சிறிபாய - II ஆம் கட்டம்
பத்தரமுல்ல

தொலைபேசி - 0112187050
தொலைநகல் - 0112186276
மின்னஞ்சல் - TrustFund20SSD@gmail.com

2022 ஆம் ஆண்டுக்கான விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் முகாமைத்துவ சபை மற்றும் பணியாட்டொகுதி

01. சங்கைக்குரிய கலபொட ஞானிஸ்ஸர தேரர்	- நிரந்தர உறுப்பினர்
02. திருமதி சுனேத்ரா குணவர்தன	- தலைவர் - விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம் செயலாளர் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் அமைச்சு
திரு நீல் பண்டார ஹப்புஹின்ன	தலைவர் - விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம் செயலாளர் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
03. திரு சந்தன ரணவீர ஆரச்சி	- சமூக சேவைகள் பணிப்பாளர்
திருமதி அனோஜா ஹேரத்	- சமூக சேவைகள் பணிப்பாளர்
04. திரு ரீ.என்.அமோன்	- உதவிச் செயலாளர் - பிரதமர் அலுவலகம்
செல்வி என்.வை.கொஹொவல	- சிரேஸ்ட உதவிச் செயலாளர் - பிரதமர் அலுவலகம்
05. திரு சமீர புபுது குமார	- தலைவர் - இலங்கை விழிப்புலனற்ற நபர்களின் மக்கள் சம்மேளனம்
06. திரு ஆர்.எம்.பி.எச்.குணரத்ன	- உதவிச் செயலாளர் - இலங்கை காண்பார்வை அற்ற ஜன சேவைகள் சபை
07. திரு கமல்சிறி நானாயக்கார	- தலைவர் - இலங்கை தேசிய விழிப்புலனற்ற நபர்களின் சம்மேளனம்
08. திரு கௌசல்யா ராஜபக்ஸ	- லயன்ஸ் கழகப் பிரதிநிதி - மாவட்டம் 306B2 லயன்ஸ் கழகம்
அவதானிப்பு சுகத் வசந்த த சில்வா	- தலைவர் - இலங்கை விழிப்புலனற்ற பட்டதாரிகளின் சபை -

உத்தியோகத்தர்கள் சபை

01. திரு ஈ.ஏ.வை,எதிரிசிங்க	- செயலாளர் - விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம்
02. செல்வி ஜே.எல்.அத்துகோரால	- பொருளாளர் - விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம்
03. செல்வி ஜீ.தினூஷா சந்தீபனீ	- முகாமைத்துவ உதவியாளர்
04. திருமதி கே.டப்.ஆர்.இரேஷா	- முகாமைத்துவ உதவியாளர்

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 - நிறுவன விவரம் / நிறைவேற்றுச் சாராம்சம்

1.1 அறிமுகம்
1.2.சட்டப் பின்னணி
1.3.குறிக்கோள்
1.4.நிறுவனத்தின் தொலைநோக்கு, செயற்பணி
1.5.நிதியத்தின் பிரதான செயற்பாடுகள்
1.6.தாபனக் கட்டமைப்பு

அத்தியாயம் 02

2.2.பௌதிக செயலாற்றுகைத் தரவுகள்
2.3.சட்டத்தின் குறிக்கோள்களுடன் இணங்குதல்
2.4.பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை (SDG) அடைந்து கொள்ளும் செயலாற்றுகை
2.5.விசேட சாதனைகள்

அத்தியாயம் 03

அத்தியாயம் 01

நிறுவன விவரம் / நிறைவேற்றுச் சாராம்சம்

1.1 அறிமுகம்

இலங்கையில் வாழும் அங்கவீனமுற்ற சமூகங்களில் விசேடமானதொரு குழுவாக விழிப்புலனற்ற சமூகம் காணப்படுகிறதுஅவர்கள் உடல் ரீதியாகவும் அறி .வு ரீதியாகவும் சாதாரண நபர்களுக்கு ஒப்பானவர்களாக உள்ளனர். தற்போது அவர்களின் வருமானம் உழைக்கும் செயன்முறை எவ்வாறு இருப்பினும் முன்னைய காலங்களில் அவர்கள் நாட்டில் வாழும் சாதாரண சமூகத்தைப் போன்று தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்தும் செயற்பாட்டுக்காக பல்வேறு கைத்தொழில்களில் ஈடுபட்டு, பல்வேறு தொழில்களைப் புரிந்து செயற்திறனுடன் நடவடிக்கைகளை மேற்கொண்ட நபர்களாக காணப்பட்டார்கள். விசேடமாக உள்நாட்டு கைத்தறிப் புடவைக் கைத்தொழிலில் ஈடுபட்டு அவர்கள் தேசிய உற்பத்திக்கு விசேட பங்காற்றவுள்ளார்கள்.

1977 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக விழிப்புலனற்ற சமூகத்தினர் தன்னிடம் காணப்பட்ட சுயாதீன பொருளாதார உற்பத்திச் செயற்பாட்டுக்கு பல்வேறு தடைகள் ஏற்பட்டன. விசேடமாக தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தும் செயன்முறை படிப்படியாக வீழ்ச்சியடையத் துவங்கியது. போட்டி நிலைமையின் கீழ் இந்த நிலைமையை எதிர்கொள்வதற்கு தன்னிடம் காணப்பட்ட அங்கவீன நிலைமை அவர்களை அசௌகரியத்துக்கு ஆளாக்கியது.

இதன் பிரகாரம் தாம் எதிர்கொண்ட அசௌகரியங்களுக்கு ஓரளவு நிவாரணம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அவர்கள் கூட்டிணைந்ததுடன் தாம் எதிர்கொண்ட இந்த அசௌகரிய நிலைமைகள் தொடர்பாக அப்போதிருந்த அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விளைவாக விழிப்புலனர்வற்ற சமூகத்துக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் அவர்களது நலன்புரி நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் 1992 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க விழிப்புலனற்ற நபர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்ற பெயரில் பாராளுமன்றத்தில் சட்டம் ஒன்றை அங்கீகரித்து அந்த நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு செயற்படுவதற்காக விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பம் முதலே இதன் அலுவலகம் சமூக சேவைகள் திணைக்களத்தில் தாபிக்கப்பட்டு சமூக சேவைகள் திணைக்களம் மூலம் வழங்கப்படும் வளங்களைப் பயன்படுத்தி செயற்படுகிறது. தற்போது இந்த நிதியத்திற்காக வருடாந்த வரவு செலவுத் திட்டம் மூலம் சமூக சேவைகள் திணைக்களத்தின் செலவுத் தலைப்பு இலக்கம் 2016 இன் கீழ் 9 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுவதுடன் தற்போதுள்ள ஒதுக்கீடுகள் நாட்டில் வாழுகின்ற விழிப்புலன் அற்ற சமூகத்துக்கு அதிகபட்ச சேவைகளை வழங்குவதற்காக நிதியத்தின் உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்களின் அமைப்புக்கள் ஒன்றிணைந்து நடவடிக்கை மேற்கொள்கின்றார்கள். இந்த செயலாற்றுகை அறிக்கை மூலம் நிதியத்தால் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்திட்டங்கள் தொடர்பாக 2022 ஆம் ஆண்டுக்கான மொத்த செயலாற்றுகை சமர்ப்பிக்கப்படுகிறது.

1.2.சட்டப் பின்னணி

1992 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க விழிப்புலன் அற்ற நபர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டமானது விழிப்புலன் அற்ற நபர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை தாபிப்பதற்கும் அதன் குறிக்கோள்கள் மற்றும் அதிகாரங்களை நிரணயித்துக் காட்டுவதற்காகவும் மற்றும் அதனோடு இணைந்த அல்லது இடைநேர் விளைவான விடயங்களுக்காகவும் ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு தயாரிக்கப்பட்ட ஒரு சட்டம் ஆகும். தற்போது இந்த நிதியமானது மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் கீழ் உள்ள சமூக சேவைகள் திணைக்களத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

1.3.குறிக்கோள்

சட்டத்தின் 5 ஆம் பந்தி பிரகாரம் அதன் குறிக்கோள்கள் பின்வருமாறு.

(அ (விழிப்புலன் அற்ற நபர்களுக்காக கல்வி மற்றும் தொழிற்பயிற்சி வசதிகளை வழங்குதல்

(ஆ) விழிப்புலன் அற்ற நபர்களுக்காக தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் தேவையான போது அவர்களுக்கு சுயதொழில் மேற்கொள்வதற்காக நிதி உதவிகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்.

(இ) விழிப்புலன் அற்ற நபர்களுக்கு கலைப் பாடநெறிகளை தொடர்வதற்கு அல்லது தொழிற் பயிற்சியினை பெற்றுக் கொள்வதற்கு இயலுமானவாறு அவர்களுக்கு வீட்டு வசதிகளை வழங்குதல்.

(ஈ) விழிப்புலன் அற்ற நபர்களின் நலன்புரிக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

(உ) விழிப்புலன் அற்ற நபர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குதல்.

(ஊ) சம உரிமைகள் மற்றும் சம வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் விழிப்புலன் அற்ற நபர்களைத் தடை செய்யும் நிலைமைகளை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

1.4.நிறுவனத்தின் தொலைநோக்கு, செயற்பணி

தொலைநோக்கு

விழிப்புலனற்ற நபர்களுக்காக அபிமானத்துடன் கூடிய சுயாதீனமான ஒரு வாழ்க்கை

செயற்பணி

விழிப்புலனற்ற நபர்களுக்கு சமத்துவம் மற்றும் சம பங்கேற்பை வழங்குவதற்குத் தேவையான உதவிகளை வழங்குதல் மற்றும் விழிப்புலனற்ற நிலைமைக்கு ஆளாகும் நபர்களை அதிலிருந்து மீற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் புனர்வாழ்வளித்தல் அவர்களுக்கு நலன்புரி சேவைகளை வழங்குதல்

1.5.நிதியத்தின் பிரதான செயற்பாடுகள்

1. விளையாட்டு உதவிகளை வழங்குதல்

* விழிப்புலன் அற்ற நபர்களுக்கு அல்லது விழிப்புலன் அற்ற நபர்களின் அமைப்புக்களுக்கு அல்லது விழிப்புலன் அற்ற மாணவர்கள் கல்வி பயிலும் விசேட பாடசாலைகளுக்கு விளையாட்டு உதவிகளை வழங்குதல்

2. கல்வி மற்றும் கலாசார உதவிகளை வழங்குதல்

* விழிப்புலன் அற்ற பாடசாலை மாணவர்கள, விழிப்புலன் அற்ற பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விழிப்புலன் அற்ற பெற்றோர்களின் விழிப்புலன் உள்ள மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்குதல்

* பிரேல் மொழி மூலம் வெளியிடப்படும் மாதாந்த சஞ்சிகைக்கு (காலம்) உதவி வழங்குதல்

3. புனர்வாழ்வு உதவிகளை வழங்குதல்

* பிற்பட்ட காலத்தில் விழிப்புலன் அற்ற நிலைமைக்கு ஆளாகிய நபர்களுக்கு புனர்வாழ்ளித்து சமூகமயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்
* பொதுவான எழுத்தில் அச்சிடப்பட்ட புத்தகங்களைப் பேச்சு புத்தகங்களாக மாற்றும் பேச்சுப் புத்தகங்களை தயாரிக்கும் நிகழ்ச்சி திட்டம்


4. விழிப்புலன் அற்ற நிலைமைக்கு ஆளாவதை தடுக்கும் நோக்கில் 60 வயதுக்கு குறைந்த நபர்களுக்கு கண் வில்லை மற்றும் கண் சிகிச்சைக்கான உதவி வழங்குதல்

5. சர்வதேச வெள்ளைப் பிரம்பு பாதுகாப்பு தினத்தை நினைவுகூரும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துதல்

6. விசேட கோரிக்கைகளின் பிரகாரம் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் விழிப்புலன் அற்ற மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளின் ஆலோசகர்களுக்கு கொடுப்பனவுகளை (தற்காலிக) மேற்கொள்ளல்

7. விழிப்புலன் அற்ற நபர்களின் வீடுகளுக்கு மின்சாரம் மற்றும் குடிநீர் பெற்றுக் கொள்வதற்கான உதவிகளை வழங்குதல்

1.6.தாபனக் கட்டமைப்பு



அத்தியாயம் 2

2.1.விழிப்புலன் அற்ற நபர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - நிதி முன்னேற்றம்

செலவுத் தலைப்பு 216- 02-03-3-1508 2022/12/31 இல்

தொ. இல.	நிகழ்ச்சித் திட்டம் மற்றும் முன்னேற்றம்	மதிப்பீடு ரூ.	செலவு ரூ.
01	விளையாட்டு உதவிகள்	35,000.00	30,000.00
02	தொழில் பயிற்சி மற்றும் ஆலோசகர் கொடுப்னவு	300,000.00	235,000.00
03	புணர்வாழ்வு உதவிகள்	1,373,000.00	1,000,457.00
04	கல்வி மற்றும் கலாசார உதவிகள்	5,133,540.00	5,279,586.00
05	சர்வதேச வெள்ளைப் பிரம்பு தின தேசிய நினைவு தின விழா	1,070,110.00	1,070,110.00
06	கண் வில்லை மற்றும் கண் சிகிச்சை	100,000.00	17,500.00
07	கணக்காய்வுக் கட்டணம்	138,000.00	138,000.00
08	நிர்வாக செலவுகள்	815,350.00	833,438.49
09	நிதிச் செலவுகள்	10,000.00	4,758.65
10	நானாவித செலவுகள்	24,500.00	23,869.00

2.2.பௌதிக செயலாற்றுகைத் தரவுகள்

விபரம்	2022 ஆம் ஆண்டு இறுதியில்
1. நடாத்தப்பட்ட முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் எண்ணிக்கை	08
2. அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி	-
(அ) உண்மையான பணியாட்டொகுதி - நிரந்தர சம்பளம் பெறும்	01
(ஆ) 1992 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க விழிப்புலன் அற்ற நபர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் நிதியத்தின் பணிகளை மேற்கொள்வதற்காக கொடுப்பனவு மேற்கொள்ளும் அடிப்படையில் சேவை புரியும் எண்ணிக்கை	03
1. விளையாட்டு உதவிகள் - விழிப்புலன் அற்ற மாணவர்கள் கல்வி பயிலும் விசேட பாடசாலைகளுக்காக செஸ் போர்ட்களை வழங்குதல்	12
2. கல்வி மற்றும் கலாசார உதவிகள்	
i. தரம் 1 முதல் க.பொ.த. (சா.த) வரை விழிப்புலன் அற்ற மாணவர்களுக்கான புலமைப் பரிசில்	101
ii. க.பொ.த. (உ.த) வரை விழிப்புலன் அற்ற மாணவர்களுக்கான புலமைப் பரிசில்	24
iii. பல்கலைக்கழக விழிப்புலன் அற்ற மாணவர்களுக்கான புலமை பரிசில்	51
Iv. விழிப்புனர்வு அற்ற பெற்றோர்களின் விழிப்புலன் உள்ள மாணவர்களுக்கான புலமைப் பரிசில்	213
v. பிரேல் மொழி மூலம் வெளியிடப்படும் மாதாந்த சஞ்சிகை (காலம் சஞ்சிகை) இதழ்	12

3. தொழிற் பயிற்சி ஆலோசகர் கொடுப்பனவுகளைச் செலுத்துதல் - ஆலோசகர்கள்	05
4. புனர்வாழ்வு உதவிகள் இலங்கை கண்பார்வையற்ற ஜன சேவை சபை மூலம் நடாத்தப்படும் பிற்பட்ட காலத்தில் விழிப்புலன் அற்ற நிலைமைக்கு ஆளாகிய நபர்களுக்காக நடாத்தப்படும் புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்கள் i. ஆலோசகர்கள் ii. பயிலுணர்கள் iii. கொவிட் தொற்று நோய் காரணமாக நடாத்தப்பட்டு வந்த சுய தொழில்களைக் கைவிட்ட நபர்கள் அல்லது சுய தொழில்களை நடாத்துவதற்கு தடைகள் ஏற்பட்ட விழிப்புலன் அற்ற நபர்களுக்காக சுயதொழில் உதவிகளை வழங்குதல் Iv. பொதுவான எழுத்தில் எழுதப்பட்ட புத்தகங்களை பேச்சு மொழிப் புத்தகங்களாக மாற்றுவதற்கான பேச்சு புத்தகக் கருத்திட்டம்	05 19 07 பக்கங்கள் 18000
5. சர்வதேச வெள்ளைப் பிரம்பு தின தேசிய நினைவு தின விழா	01

2.3.சட்டத்தின் குறிக்கோள்களுடன் இணங்குதல்

தொ. இல.	குறிக்கோள்	செயற்பாடுகள்
01	விழிப்புலன் அற்ற நபர்களுக்கு கல்வி சார் மற்றும் தொழிற்பயிற்சி வசதிகளை வழங்குதல் விழிப்புலன் அற்ற நபர்களின் நலன்புரி தொடர்பில் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்	தரம் 01 ஒன்று முதல் க.பொ.த. (சா.த) வரை விழிப்புலன் அற்ற மாணவர்களுக்கான புலமைப் பரிசில் ii. க.பொ.த. (உ.த) வரை விழிப்புலன் அற்ற மாணவர்களுக்கான புலமைப் பரிசில் iii. பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப் பரிசில் Iv. விழிப்புலன் அற்ற பெற்றோர்களின் விழிப்புலன் உள்ள மாணவர்களுக்கான புலமைப் பரிசில் v. பிரேல் மொழி மூலம் வெளியிடப்படும் மாதாந்த சஞ்சிகை (காலம் சஞ்சிகை)
02	விழிப்புலன் அற்ற நபர்களை நபர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் தேவையான போது அவர்களுக்கு சுய தொழிலுக்கான நிதி உதவிகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்	சுயதொழில் உதவி வழங்குதல்
03	விழிப்புலன் அற்ற நபர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்கான கருதிட்டங்களை நடைமுறைப்படுதுதல்	கண் வில்லை மற்றும் கண் சிகிச்சை தொடர்பில் உதவி வழங்குதல் புனர்வாழ்வு உதவி வழங்குதல் (பிற்பட்ட காலத்தில் விழிப்புலன் அற்ற நபர்களை பனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்தல்)
04	சம உரிமைகள் மற்றும் சம வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் விழிப்புலன் அற்ற நபர்களைத் தடை செய்யும் நிலைமைகளை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.	பேச்சுப் புத்தகங்களை தயாரிப்பதற்கான உதவிகளை வழங்குதல் விளையாட்டு உதவிகள் வழங்குதல்

2.4.பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை (SDG) அடைந்து கொள்ளும் செயலாற்றுகை

இனம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி நோக்கங்கள்

இலக்கு / நோக்கம்	இலக்கு	சாதனைக் குறிகாட்டி	இது வரை சாதனைகளைப் பெற்றுக் கொள்வதன் முன்னேற்றம்		
			0% - 49%	50% - 74%	75% - 100%
2030 ஆம் ஆண்டளவில் கல்வியில் ஆண் பெண் பால் நிலையின் அடிப்படையில் பாகுபாடுகளை நீக்குதல், கல்வியின் அனைத்து மட்டங்களுக்கும் பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பங்களை உறுதி செய்தல் மற்றும் அங்கவீனமுற்ற நபர்களுக்கு, உள்நாட்டவர்களுக்கு மற்றும் அபாயத்துக்கு ஆளாவதற்கான வாய்ப்புக்கள் கொண்ட சிறுவர்களுக்கு தொழிற் பயிற்சி பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்குதல்	பாடசாலைக் கல்வி மற்றும் பல்கலைக்கழக கல்வி பயிலும் விழிப்புலன் அற்ற மாணவ மாணவிகளுக்கு புலமைப் பரிசில் வழங்குதல்	புலமை பரிசீலர்களை பெற்றுக் கொண்ட மாணவர் எண்ணிக்கை			√
	விழிப்புலன் அற்ற பெற்றோர்களின் பாடசாலைக் கல்வி பயிலும் விழிப்புலன் உள்ள மாணவர்களுக்கான புலமைப் பரிசில்களை வழங்குதல்	புலமை பரிசீலர்களை பெற்றுக் கொண்ட மாணவர் எண்ணிக்கை			√
	பல்கலைக்கழக கல்வி பயிலும் விழிப்புலன் அற்ற பட்டதாரி மாணவர்களுக்கான தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குதல் (கையடக்க தொலைபேசி)	தொழில்நுட்ப உபகரணங்களை பெற்றுக் கொண்ட பட்டதாரி மாணவர்களின் எண்ணிக்கை			√
	விழிப்புலன் அற்ற மாணவர்கள் கல்வி பயிலும் விசேட பாடசாலைகளுக்கான விளையாட்டு உதவிகளை வழங்குதல்	விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்ட பாடசாலைகள் எண்ணிக்கை		√	

2030 ஆம் ஆண்டளவில் அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் இளைஞர்கள் உள்ளிட்ட அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களுக்கு பயனுள்ள மற்றும் பொருத்தமான தொழில் வாய்ப்புகளை வழங்குதல்	விழிப்புலன் அற்ற நபர்களுக்கான சுயதொழில் உதவிகளை வழங்குதல்	புணர்வாழ்வு நிகழ்ச்சி திட்டத்துக்காக கலந்து கொண்ட நபர்கள் எண்ணிக்கை	√		
2030 ஆம் ஆண்டளவில் வயது, பால் நிலை, இனம், சாதி, மதம் அல்லது பொருளாதாரம் அல்லது ஏனைய நிலைமைகள் பற்றிக் கருத்திற் கொள்ளாது அனைவரதும் சமூக பொருளாதார மற்றும் அரசியல் இடைத்தொடர்புகளை வலுவடையச் செய்தல் மற்றும் மேம்படுத்துதல்	பிற்பட்ட காலத்தில் விழிப்புலன் அற்ற நிலைமைக்கு ஆளாகிய நபர்களுக்கு புணர்வாழ்வழித்து சமூகமயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உதவி வழங்குதல்	புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்து கொண்ட நபர்களின் எண்ணிக்கை			√
	நபர்களின் வாசிப்பு உரிமையை உறுதி செய்வதற்காக பிரேல் மொழி மூலம் மாதாந்தம் வெளியிடப்படும் காலம் சஞ்சிகைக்கு உதவி வழங்குதல்	வெளியிடப்படும் சஞ்சிகை தவனைகளின் அளவு			√
	பொதுவான அச்சிடப்பட்ட எழுத்தில் எழுதப்பட்ட புத்தகங்களை பேச்சு புத்தகங்களாக மாற்றி கேட்டல் மூலம் வாசிக்கும் உரிமையினை உறுதி செய்வதற்காக பேச்சு புத்தக கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உதவி வழங்குதல்	பேச்சுப் பக்கங்களாக மாற்றப்பட்ட அச்சிடப்பட்ட பக்கங்களின் தொகை		√	
	விழிப்புலன் அற்ற நபர்களின் பயணிக்கும் கருவியாக உள்ள வெள்ளைப் பிரம்பை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச வெள்ளைப் பிரம்பு பாதுகாப்பு தின தேசிய நினைவு தின விழா	விழாக்களில் கலந்து கொண்ட விழிப்புலனற்ற நபர்களின் எண்ணிக்கை		√	

2.5.**விசேட சாதனைகள்**

• ஒதுக்கீடு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட ஒதுக்கீடுகளில் இருந்து சுமார் 400 விழிப்புலன் அற்ற நபர்களின் பங்கேற்பில் வெள்ளைப் பிரம்பு நினைவு தின தேசிய விழாவை நடாத்துதல்

சவால்கள்

- விழிப்புலன் அற்ற சமூகத்துக்காக வழங்கப்படும் சேவைகளை விரிவு படுத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல்
- நிலவிய போக்குவரத்து மற்றும் பொருளாதார சவால்களின் மத்தியில் புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக சேவை பெறுநர்களை பங்குபற்றச் செய்தல் தொடர்பான சவால்

இலக்குகள்

- நாட்டில் வாழும் ஒட்டுமொத்த விழிப்புலன் அற்ற சமூகத்தினரை உள்ளடக்கும் வகையில் தரவு முறைமை ஒன்றை தயாரித்தல்
- விழிப்புலன் அற்ற பல்கலைக்கழக மாணவ மாணவிகளுக்காக தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குதல்

- அச்சிடப்பட்ட 100 புத்தகங்களை பேச்சு புத்தகங்களாக மாற்றுதல்

- அங்கவீனமுற்ற மாணவ மாணவிகளுக்கு இடையில் உள்ளக விளையாட்டுக்களை மேம்படுத்தல்

தலைவர்
விழிப்புலனற்ற நபர்களின் நிதியம்

பெயர் - யமுனா பெரேரா
பதவி - தலைவர்

திகதி - -

விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

31 டிசம்பர் 2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று

	குறிப்பு	2022 ரூ.	2021 ரூ.
செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்			
சாதாரண நடவடிக்கைகள் மூலம் (மிகை அல்லது குறைவு)		958,571.49	275,049.60
நடைமுறைப் பொறுப்புக்களின் அதிகரிப்பு			
தொழிற் பயிற்சி செலவுகள்			47,000.00
வெள்ளைப் பிரம்பு தின செலவுகள்			
கல்வி மற்றும் கலாசார செலவுகளுக்கான உதவிகள்		186,900.00	
புனர்வாழ்வு செலவுகளுக்கான உதவிகள்			57,875.00
நடைமுறைப் பொறுப்புக்களின் குறைவு			
புனர்வாழ்வு செலவுகள்		(20,225.00)	
கல்வி மற்றும் கலாசார செலவுகளுக்கான உதவிகள்			(287,000.00)
தொழிற் பயிற்சி செலவுகள்		(15,000.00)	
கணக்காய்வுக் கட்டணம்			(78,000.00)
நிதிச் செலவுகள்			(6,580.00)
இனம் காணப்படாத பற்றுச்சீட்டுக்கள்			(600.00)
நடைமுறைச் சொத்துக்களின் அதிகரிப்பு			
நிலையான வைப்புக்கள்		(2,166,290.63)	
நடைமுறைச் சொத்துக்களின் குறைவு			
முடிவுப் பொருட்கள்			9,671.40
இறுதி ஆண்டின் இலாப சீராக்கல் தொகை			(380,400.00)
செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் தேறிய காசுப் பாய்ச்சல்		(1,056,044.14)	(362,984.00)
ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவைகளும்		3,032,019.75	3,395,003.75
ஆண்டின் இறுதியில் காசும் காசுக்கு சமமானவைகளும்		1,975,975.61	3,032,019.75

விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

31 டிசம்பர் 2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் கணக்கு

	2022	
	ரூ.	**ரூ.**
01.01.2022 இல் மீதி		3,032,019.75
பெறுவனவுகள்		
அரச கொடைகள்	9,000,000.00	
மேலதிக கட்டணங்கள்	486,900.00	
நேரடி பெறுவனவுகள்	17,365.63	9,504,265.63
மொத்த பெறுவனவுகள்		**12,536,285.38**
விளையாட்டு	30,000.00	
தொழிற் பயிற்சி செலவுகள்	235,000.00	
கல்வி மற்றும் கலாசார செலவுகளுக்கான உதவிகள்	5,279,586.00	
புனர்வாழ்வு செலவுகளுக்கான உதவிகள்	1,000,457.00	
கண் வில்லைகள் மற்றும் சிகிச்சைகள்	17,500.00	
கணக்காய்வுக் கட்டணம்	138,000.00	
நிதிச் செலவுகள்	4,758.65	
நிர்வாக செலவுகள்	799,729.12	
நானாவித செலவுகள்	23,869.00	
நிலையான வைப்பு	2,000,000.00	
வெள்ளைப் பிரம்பு தின செலவுகள்	1,031,410.00	10,560,309.77
31.12.2022 இல் காசு மீதி		**1,975,975.61**

விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்
31 டிசம்பர் 2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்துக்கள் பற்றிய கூற்று

	திரண்ட நிதி ரூ.	மொத்தம் ரூ.
01.01.2015 இல் மீதி	384,248.48	384,248.48
ஆண்டுக்கான (மிகை அல்லது குறைவு)	1,256,731.93	1,256,731.93
21.12.2015 இல் மீதி	1,640,980.41	1,640,980.41
01.01.2016 இல் மீதி	1,640,980.41	1,640,980.41
ஆண்டுக்கான (மிகை அல்லது குறைவு)	(513,677.70)	(513677.70
21.12.2016 இல் மீதி	1,127,302.71	1,127,302.71
01.01.2017 இல் மீதி	1,127,302.71	1,127,302.71
ஆண்டுக்கான (மிகை அல்லது குறைவு)	165,974.21	165,974.21
21.12.2017 இல் மீதி	1,293,276.92	1,293,276.92
01.01.2018 இல் மீதி	1,293,276.92	1,293,276.92
ஆண்டுக்கான (மிகை அல்லது குறைவு)	989,504.80	989,504.80
21.12.2018 இல் மீதி	2,282,781.72	2,282,781.72
01.01.2019 இல் மீதி	2,282,781.72	2,282,781.72
ஆண்டுக்கான (மிகை அல்லது குறைவு)	(544,920.07)	(544,920.07)
21.12.2019 இல் மீதி	1,737,861.65	1,737,861.65
01.01.2020 இல் மீதி	1,737,861.65	1,737,861.65
இறுதி ஆண்டுக்கான இலாப சீராக்கம்	180,914.50	180,914.50
ஆண்டுக்கான (மிகை அல்லது குறைவு)	372,844.00	372,844.00
	2,291,620.15	2,291,620.15
01.01.2021 இல் மீதி	2,291,620.15	2,291,620.15
இறுதி ஆண்டுக்கான இலாப சீராக்கம்	(380,400.00)	(380,400.00)
ஆண்டுக்கான (மிகை அல்லது குறை)	275,049.60	275,049.60
31.12.2021 இல் மீதி	2,186,269.75	2,186,269.75
01.01.2022 இல் மீதி	2,186,269.75	2,186,269.75
ஆண்டுக்கான (மிகை அல்லது குறை)	958,571.49	958,571.49
21.12.2022 இல் மீதி	3,144,841.24	3,144,841.24

தலைவர்,
விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் 2022 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, தேறிய சொத்து மாற்றக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2022 டிசம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கைச் சனநாயக சோஷலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை உரிய நேரத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை இப் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர்ந்த நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் மூலம் 2022 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயலாற்றுகை, காசுப்பாய்ச்சல் ஆகியன இலங்கை அரச துறையின் கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் அனுபவங்களுக்கு முரணாக கொடுக்கல் வாங்கல்களைப் பிரதிபன்னும் தெளிவற்ற மற்றும் முறைசாராத விதமாக பிரதான பேரேடு மற்றும் கணக்குப் புத்தகங்கள் பேணப்பட்டுள்ளதுடன் கொடுக்கல் வாங்கல் தொடர்பான வவுச்சர் இலக்கங்கள், காசோலை இலக்கம் போன்றன விபரங்கள் அழிக்கப்பட்டு மாற்றம் மேற்கொண்டு வெளிப்படைத் தன்மை அற்ற விதமாக காசுப் புத்தகம் மற்றும் செலவு ஆவணங்கள் பேணப்பட்டு வந்துள்ளன.

(ஆ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இல. 01 பிரகாரம் அட்டுறு அடிப்படையில் கணக்குகளில் ஒதுக்கீடு மேற்கொள்ளப்படாமை காரணமாக மீளாய்வு ஆண்டின் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்கள் தொடர்பாக ரூ. 52,362 வட்டி வருமானம் கணக்குகளில் பதியப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு ஆகிய பிரிவுகளில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கான அடிப்படையினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சியங்கள் போதுமானதும் பொருத்தமானதும் ஆகும் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் நிர்வகிக்கும் தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பித்தல், மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியத்தை தொடர்ச்சியாக பேணிச் செல்லும் ஆற்றலை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் முகாமைத்துவத்தால் நிதியம் முடிவுறுத்தப்படுவதற்கு தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பம் அல்லது வேறு ஏதும் மாற்றுவழிகள் இல்லாத போது செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பம் தவிர்ந்த தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் நிதியத்தின் தொடர்ச்சியான இருப்புக்கு ஏற்புடைய விடயங்களை வெளிக்கொணர்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பில் பரிசோதிக்கும் பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பு மூலம் ஏற்கப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்தம் மற்றும் நடைமுறை நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமானவாறு தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அளவு ரீதியான பொய்யான கூற்றுக்கள் அற்றவை என நியாயமான ஓர் உறுதிப்பாட்டினை வழங்குதல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொகுக்கப்பட்ட அறிக்கையினை வெளியிடல் எனது நோக்கம் ஆகும். நியாயமான உறுதிப்பாடு உயர்வான தரத்தினைக் கொண்ட ஓர் உறுதிப்பாடாக அமைகின்ற போதும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்ற உறுதிப்பாடாக அமைய மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டு விளைவின் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக் கூடும் என்பதுடன் இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அதனைப் பயன்படுத்துபவர்களினால் பொருளாதாரத் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் சந்தேகக் கண்ணோட்டத்தில் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் அபாயங்களை அடையாளம் காணும் போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அபாயத்தினைக் குறைப்பதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாக உள்ளது. பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினை விடவும் மோசடி காரணமாக பாரிய தாக்கம் ஏற்படும் என்பதுடன் தவறான செயற்பாடு, போலி ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்றே வழிவிடுதல், அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை வழிவிடுதல் ஆகியன மோசடிகள் நிகழ்வதற்கான காரணங்கள் ஆகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்லாத போதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான ஒரு விளக்கம் பெறப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயம் மற்றும் முகாமைத்துவம் மூலம் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிக்கொணர்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பு பற்றிய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது பற்றி பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சியங்களின் அடிப்டையில் கணக்கீட்டுக்கான நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பான அடிப்படையை பயன்படுத்துவதற்கான ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதுமான அளவு நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக என்னால் தீர்மானிக்கப்படுமாயின் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிக்கொணர்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அந்த வெளிக்கொணர்தல் போதுமானதாக அமையாது விடின் எனது அபிப்பிராயம் சீர் செய்யப்படல் வேண்டும். இருப்பினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் கீழ் தொடர்ச்சியான இருப்பு முற்றுப்பெற இடமுண்டு.

- நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமானவாறு

உள்ளக்கப்பட்டுள்ளதென மற்றும் வெளிக்கொணர்தல்கள் உள்ளிட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பிப்பு மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வகிக்கும் தரப்பினர்களுக்கு அறிவிக்கப்படும்.

2 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஒதுக்கீடுகள் உள்ளடங்கும்.

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் பிரகாரம் கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுரைகள் என்னால் பெறப்பட்டதுடன் எனது பரிசோதனை மூலம் தெரியவரும் விதமாக உரிய நிதி அறிக்கைகள் நிதியத்தால் பேணப்பட்டு வந்தன.

2.1..2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் பிரகாரம் நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்திசைவாக உள்ளன.

2.1..3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் பிரகாரம் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் பொருண்மையான விடயங்களுக்கு வரையறுக்கப்பட்டமை காரணமாக பின்வரும் வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கான எதுவும் எனது கவனத்திற்கு உட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் பிரகாரம் நிதியத்தின் நிர்வாக சபையின் எவரேனும் உறுப்பினர் ஒருவருக்கு நிதியத்துடன் இணைந்து ஏதேனும் ஓர் ஒப்பந்தம் தொடர்பாக நேரடியாக அல்லது வேறு விதமாக பொதுவான தொழில் முயற்சி நிலைமைகளுக்குப் புறம்பாக தொடர்பு பட்டுள்ளாரென.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் பிரகாரம் ஏதேனும் ஏற்புடைய எழுதப்பட்ட சட்டத்திற்கு அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட வேறு ஏதும் பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமையாதவாறு செயற்பட்டுள்ளதென.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த நிதியத்தின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காத விதமாக செயற்பட்டுள்ளதென.

(அ) நிதியத்துக்காக அரச ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக உள்நாடு அல்லது வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப் பெறும் அளிப்புக்கள், பரிசுகள் அல்லது நன்கொடைகள் அட்டுறு அல்லது சேகரிக்கப்பட்ட தொகை மற்றும் நிதியத்தின் முதலீடுகளில் இருந்து கிடைக்கப் பெறும் வருமானம் அல்லது நிதியத்துக்கு அறவிடப்பட வேண்டிய அல்லது ஏனைய பண வடிவில் நிதியத்தைப் பெற்றுக் கொள்வதற்கு 1992 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க விழிப்புலனற்ற நபர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் சட்ட ரீதியான ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதும் நிதியத்தின் ஆரம்பம் முதல் மீளாய்வு ஆண்டு வரை 29 ஆண்டு காலத்திற்குள் நிதியத்தை அபிவிருத்தி செய்வதற்காக அரச அளிப்புகளுக்கு மேலதிகமாக ஏனைய நிதியங்கள் மீது கவனம் செலுத்தப்பட்டு அல்லது அதற்கான எதிர்காலத் திட்டம் எதுவும் நிதியத்திடம் காணப்படவில்லை.

(ஆ) விழிப்புலன் அற்ற நபர்களுக்கு நலன்புரிகளை வழங்குவதற்காக பொது நம்பிக்கைப் பொறுப்புத் திணைக்களத்தில் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தனிநபர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் சொத்து நம்பிக்கைப் பொறுப்புகளின் நன்மைகளை வழங்குதல் தொடர்பான பின்னாய்வுப் பணிகளை மேற்கொண்டு குறித்த நன்மைகளை நிதியத்துக்குப் பெற்றுக் கொள்வதன் மூலம் ஏனைய பெறுவனவு மூலங்களில் இருந்து நிதியத்தைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவில்லை.

(இ) நிதியத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான

- விழிப்புலன் அற்ற நபர்களுக்காக தொழிலில் ஈடுபடுத்துவதற்கான வாய்ப்புக்களை உருவாக்குதல்.

- விழிப்புலன் அற்ற நபர்களுக்கு கலைப் பாடநெறிகளை தொடர்வதற்கு அல்லது தொழிற்பயிற்சி பெற்றுக் கொள்வதற்கு இயலுமானவாறு வீட்டு வசதிகளை வழங்குதல்.
- விழிப்புலன் அற்ற நபர்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வசதிகளை வழங்குதல்.
- சம உரிமைகள் மற்றும் சம வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதனைத் தடுக்கும் நிலைமைகளை இல்லாது ஒழித்தல் போன்ற பணிகள் தொடர்பில் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவில்லை.

(ஈ) செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் கண் வில்லைகள்/ கண் சிகிச்சைகளை வழங்குதல் தொடர்பில் 05 பயனாளிகளை இலக்கு வைக்கப்பட்ட போதும் ஒரே ஒரு பயனாளி தொடர்பில் மாத்திரம் அது நடைமுறைப்படுத்தப்பட்டது.

(உ) தரம் 1 முதல் க.பொ.த (சா.த) வரை கல்வி கற்கும் மாணவர்கள், உயர் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் லுவி பிரேல் என்ற பெயரில் விழிப்புலன் அற்ற பெற்றோர்களின் விழிப்புலன் குன்றாத மாணவர்களுக்கு கல்வி சார் உதவியாக புலமைப் பரிசில்களை வழங்குதல் நிதியம் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது அதன் பிரகாரம் மீளாய்வு ஆண்டின் போது இலக்கு வைக்கப்பட்ட 401 மாணவர்களுள் 368 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்குவதற்காக ரூ.5,279,586 செலவு செய்யப்பட்டது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரிப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

I. ஒட்டு மொத்த நாட்டையும் உள்ளடக்கும் விதமாக விழிப்புலன் அற்ற சிறுவர்கள் எண்ணிக்கையை இனம் காணல் தொடர்பான தரவு முறைமை ஒன்று பேணப்படவில்லை.

II. புலமைப் பரிசில் வழங்குதல் தொடர்பாக மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான அடிப்படை, தேவையான தகைமைகள், முன்னுரிமை வழங்குதல், வழங்கப்படும் புலமைப் பரிசில்களின் பெறுமதி போன்ற அளவுகோள்கள் உள்ளடங்கிய புலமைப் பரிசில் வழங்குதற்கான திட்டம் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவில்லை.

III. புலமைப் பரிசில் பெறுநர்கள் தெரிவு செய்யப்பட்ட முறையில் தொடர்பான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அப் பணிகள் சரியாக மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக கணக்காய்வின் போது சிக்கல் நிலைமை காணப்பட்டது.

IV. மார்ச் மற்றும் ஏப்ரல் ஆகிய மாதங்களில் 158 புலமைப் பரிசில் பெறுனர்களுக்கு ரூ.735,000 மாணவர் உதவு தொகை வழங்கப்பட்டதுடன் 115 புலமைப் பரிசில் பெறுநர்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ.507,000 தொகையை உறுதி செய்வதற்கான பற்றுச்சீட்டுக்கள் நிதியத்துக்கு வழங்கப்படவில்லை. அதன் பிரகாரம் மாணவர் உதவு தொகை வழங்கும் செயன்முறை தொடர்பில் உள்ளகக் கட்டுப்பாடு பலவீனமாக காணப்படுவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஊ) பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் விழிப்புலன் அற்ற மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் பணிகள் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள 17 அரச பல்கலைக்கழகங்களுள் 06 பல்கலைக்கழகங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

(எ) விழிப்புலன் அற்ற திறமைசாளியான மாணவர்களின் ஆரம்பக் கல்வியை ஊக்குவிக்கும் நோக்கில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த விழிப்புலன் அற்ற மாணவ மாணவிகளுக்காக புலமைப் பரிசில் வழங்கும் வேலைத்திட்டம் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை.

(ஏ) விழிப்புலன் அற்ற சமூகத்தினரின் புணர்வாழ்வு மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தேசிய மட்டத்தில் வெளிப்படைத் தன்மையுடனும் முறையாகவும் நடைமுறைப்படுத்துவதற்காக விழிப்புலன் அற்ற சமூகத்தினரின் எண்ணிக்கை மற்றும் மாவட்ட ரீதியான பரம்பல், வயது அமைப்பு, விழிப்புலன் அற்ற தன்மை, பொருளாதார நிலைமை ஆகிய தகவல்களை இனம் காணல் முக்கியம் பெறுகிறது. அதன் மூலம் குறித்தொதுக்கப்பட்ட சரியான மற்றும் பயனுள்ள தீர்மானங்களை மேற்கொள்ளல் இலகுவாக அமையும். ஆனாலும் விழிப்புலன் அற்ற சமூகத்தினரின் அத்தகைய தகவல்கள் உள்ளடங்கிய தரவு முறைமை ஒன்றைத் தயார் செய்வதற்கான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த நிதியத்தின் வளங்களை சிக்கனமாகவும் செயற்திறனுடனும் மற்றும் பயனுள்ளவாறு காலப் பிரிவுகளுக்குள் ஏற்புடைய சட்டவிதிகளின் பிரகாரம் பெறுகைச் செயன்முறைகள் பயன்படுத்தப்படவில்லை என.

2.3 ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியளவில் நிதியம் தாபிக்கப்பட்டு 29 ஆண்டுகள் கடந்துள்ள போதும் அந்த நிதியத்தின் செயலாளர் பதவிக்கான

கடமைகளை மேற்கொள்ளும் சமூக சேவை உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் கடமைகளை நிறைவேற்றும் மேலும் உத்தியோகத்தர்கள் இருவரால் நிதியத்தின் கடமைப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டு வந்துள்ளது.

டப்ளிவ்.பி.சீ. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமையதிபதி